<u>அ.வ.எண்.**54/2021** பி.வா.சா.**2–**கணேசன் **14.08.2025**</u>

**<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

நான் கட்டிடம் கட்டும் தொழில் செய்கிறேன். 3 ஆம் பிரதிவாதியை எனக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக தெரியும். 2 ஆம் பிரதிவாதி செந்தில்குமாரை மூன்று ஆண்டுகளாக தெரியும். 25.11.2013 அன்று பிரதிவாதிகள் மூவரும் பத்திர எழுத்தாளர் அலுவலகத்தில் இருந்தார்கள், நானும் அப்போது அங்கு சென்றிருந்தேன். மேற்சொன்ன தேதியன்று பி.வா.சா.ஆ.17. கிரைய ஆவணம் ஏற்பட்டது, அதில் நான் 1 வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். 2 ஆம் பிரதிவாதி செந்தில்குமாரை நான் கட்டிட வேலைக்கு மணல்மேட்டிற்கு சென்றபோது எனக்கு பழக்கம் ஏற்பட்டது. பி.வா.சா.ஆ.17 கிரைய ஆவணத்தில் 2 ஆம் சாட்சியாக செல்வகுமார் என்பவர் கையொப்பம் செய்தார். பி.வா.சா.ஆ.17 கிரைய ஆவணத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும்போதுநான் செல்லவில்லை. கிரையத்திற்காக மகாமுனி, செந்தில்குமார், பாப்பாத்திக்கு ரூ.15,00,000/- கொடுத்தார்கள். ரூ.15,00,000/- பையில் கொண்டு வந்தார்கள். பணம் எண்ணிக்கொடுக்கும்போது நான் அங்குதான் இருந்தேன். ரூ.500/- நோட்டுகள் இருக்கும். 2, 3 பிரதிவாதிகளை கிரையம் பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தெரியும். 1, 2 பிரதிவாதிகளை உங்களுக்கு யார்

என்று தெரியாது என்றும், 3 ஆம் பிரதிவாதி உங்களை அழைத்து வந்து உங்களை பொய் சாட்சியாக உங்களை சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதி உங்களுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதி, 1, 2 பிரதிவாதிகளுக்கு ரூ.15,00,000/- பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.